செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

நாள்: 04.02.2025

# தமிழ்ச் சொல்லிலக்கண மரபு
# Treatment of Morphology and Syntax in Tamil Grammar
## பயிலரங்கம் - 22

## (18.3.2025 - 27.3.2025)
## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ்மொழி தொன்மையும் நீண்ட இலக்கண மரபும் கொண்ட உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்கிறது. எண்ணிலடங்கா இலக்கிய வகைமைகள் இம்மொழியில் உள்ளன. அதேபோன்று இலக்கண நூல்களும் பல உள்ளன. *தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கணவிளக்கம், இலக்கணக்கொத்து, தொன்னூல்விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம்* முதலியவை அதில் குறிப்பிடத்தக்கவை. இத்தகைய இலக்கண நூல்களில் சொல்லிலக்கண மரபின் தோற்றம், வளர்ச்சிநிலை ஆகியன குறித்து ஆராய்தலே இப்பயிலரங்கின் நோக்கமாகும்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கண மரபினையுடையது தமிழ்மொழி. உலகம் முழுவதும் சொற்களைப் **பெயர், வினை, இடை, உரி** என்னும் நிலையில் பகுத்துள்ளனர். ஓர் எழுத்துத் தனித்து நின்றோ அல்லது பல எழுத்துகள் சேர்ந்துவந்தோ பொருள்தந்தால் அது சொல் எனப்படும். சொல் என்பதற்குப் **பதம், கிளவி, மொழி** என்ற மாற்றுச்சொற்கள் உண்டு. சொல்லிலக்கணத்தைப் **பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்** என வகைப்படுத்துவர். பெயர்ச்சொல் என்பது ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் ஆகும். அவை *பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்* என்னும் ஆறின்

அடிப்படையில் தோன்றும். இவற்றை *ஆகுபெயர், இயற்பெயர், இடப்பெயர், இடுகுறிப்பெயர், எண்ணுப்பெயர், காரணப்பெயர், காலப்பெயர், குடிப்பெயர், சினைப்பெயர், தொழிற்பெயர், பண்புப்பெயர், பொருட்பெயர், மக்கள்பெயர், மரப்பெயர், விரவுப்பெயர், வினையாலணையும் பெயர்* என்றும் வகைப்படுத்துவர்.

**வினைச்சொல்** என்பது ஒரு பொருளின் வினையை உணர்த்துவதாகும். ஒரு சொல் முடிவுபெற்ற வினைச்சொல் முற்று எனப்படும். முடிவுபெறாத வினைச்சொல் எச்சம் எனப்படும். **வினைமுற்று** இருவகைப்படும். அவை தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று ஆகும். **தெரிநிலை வினைமுற்று** என்பது *செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள்* என்னும் ஆறையும் உணர்த்துவது ஆகும். **குறிப்பு வினைமுற்று** என்பது *பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்* என்னும் ஆறின் அடிப்படையில் தோன்றிச் *செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள்* என்னும் ஆறினுள் செய்பவனாகிய கருத்தாவை மட்டும் விளக்குவது ஆகும். **எச்சம்** இரண்டு வகைப்படும் அவை *பெயரெச்சம், வினையெச்சம்* எனப்படும். **பெயரெச்சம்** பெயரைக்கொண்டு முடிவுறும் காலங்காட்டுகின்ற முற்றுப்பெறா வினைச்சொற்கள் ஆகும். *தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம்* என இருவகைப்படும். **வினையெச்சம்** என்பது வினைமுற்றினைக் கொண்டு முடிவுறும் காலங்காட்டுகின்ற முற்றுப்பெறா வினைச்சொற்கள் ஆகும். *தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம்* என வினையெச்சம் இருவகைப்படும்.

**இடைச்சொல்** என்பது தனித்து நில்லாமல் பெயரையாவது வினையையாவது சார்ந்து வருவது. *ஐ* முதலிய வேற்றுமை உருபுகளும், *போல, ஒப்ப* முதலிய உவம உருபுகளும், *அ, இ, உ* என்னும் சுட்டுக்களும் *யா* முதலிய வினாவெழுத்துக்களும் `*உம்*' முதலிய பிறவும் இடைச்சொற்கள் என்று கூறப்படும். மேற்சொன்ன வேற்றுமை உருபுகள் முதலியனவும், *இடைநிலைகள், சாரியைகள், விகுதிகள்*, தமக்கெனப்

பொருளையுடைய *ஏ, ஓ, மற்று, தான்* முதலியனவும் இடைச்சொற்களாகும். **உரிச்சொல்** என்பது பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் சொல்லாகும். பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் விட்டு நீங்காதனவாய் வரும். உரிச்சொல் **ஒருபொருள் குறித்த பலசொல், பலபொருள் குறித்த ஒருசொல்**, என இருவகைப்படும். இவ்வாறு சொல்லிலக்கண மரபை ஆய்வாளர்கள் ஆழமாக அறிந்து கொள்ளும் நோக்கில் இப்பயிலரங்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிலரங்கில் மரபிலக்கணத் தெளிவும் மொழியியல் அறிவும் பன்மொழிப் புலமையும் ஒருங்கேபெற்ற அறிஞர் பெருமக்கள் பயிற்றுவிக்க உள்ளனர். பல்கலைக்கழகம் /கல்லூரிகளில் தமிழியல், மொழியியல் ஆகிய துறைகளில் முனைவர் பட்ட / ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – **40**
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **18.3.2025** முதல் **27.3.2025** முடிய **10** நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை **10.00 - 1.00** & மாலை **2.00 - 5.00.**
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.

- ❖ பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.

- ❖ பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

- ❖ இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/EUjhhHRyhSHmmoHC6 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு **(QR-code)** மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- ❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **06.03.2025** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.

- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **07.03.2025** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

- ❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் **38** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.

- ❖ பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**